...istered as a News Paper | பக்கங்கள் 04 | விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

...HE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

...தம் 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | ஐப்பசி 16 | (01 - 11 - 1992) | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 257


## யாழ். மாவட்டத்தில் காசநோயாளர் அதிகரிப்பு

தற்போது யாழ். மாவட்டத்தில் காசநோயாளரது எண்ணிக்கை வெகுவாக அதிகரித்து இருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்த ஆண்டு முதல் ஆறு மாதத்தில் சுமார் 1710 பேர் இந்த நோயினால் பாதிக்கப்பட்டதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என மார்புநோய் சிகிச்சை பிரிவைச் சேர்ந்த டாக்டர் வ. சிவராசா தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், எண்ணிக்கை இதனை விட அதிகமாக இருக்கலாம். போக்குவரத்து கஷ்டங்களினால் பொதுமக்கள் பரிசீலனை செய்ய வைத்தியசாலைக்கு வர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என கூறினார். தற்போது அவரவர் வீடுகளில் வைதது

(4 ஆம் பக்கம் பார்க்க)

# அரச படையிலிருந்து விலகுவோரை கட்டுப்படுத்த அரசு பகீரத முயற்சி

## அமைச்சர்கள், தளபதிகள் உட்பட ராணுவ முகாம்களுக்கு விஜயம்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தில் இருந்து விலகுவோரின் தொகையைக் கட்டுப்படுத்துவதிலும், மனம் தளர்ந்து போயுள்ள இராணுவத்தினருக்கு உற்சாகம் ஊட்டுவதிலும், சிறிலங்கா இராணுவ தலைமைப்பீடமும், அரசாங்கமும் தீவிர அக்கறை காட்டுவதாகத் தெரிய வருகின்றது. இதன் ஒரு கட்டமாக வடக்கு - கிழக்கிலுள்ள இராணுவ முகாம்களுக்கு உயர் இராணுவ தளபதிகளும், பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளும், அமைச்சர்களும் விஜயங்களை மேற்கொண்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் இருந்து ஒக்டோபர் முதல் வாரம் வரை இராணுவத்தை விட்டு ஓடியோர் தொகை 1,500 வரை எட்டியுள்ளது. இதனை கூட்டுப்படை தலைமையலுவலகப் பேச்சாளர் கேணல் சரத் முனசிங்கவும் ஊர்ஜிதம் செய்துள்ளார்.

ஆகஸ்ட் மாதத்தில் 840 பேரும், செப்டம்பரில் 502 பேரும், ஒக்டோபர் முதல் வாரத்தில் 116பேரும் இராணுவத்தை விட்டு ஓடியுள்ளனர் எனக் கேணல் சரத் முனசிங்கா தெரிவித்தார்.

இதேவேளை ஒக்டோபர் மாதத்தின் மற்றைய வாரங்களில் பலர் 21 நாட்கள் விடுமுறையில் வீடுகளுக்குச் சென்றுள்ளனர் என்றும், இவர்களின் விடுமுறைமுடிந்துதிரும்பிய பின்னரே ஓடியோர் நிலையில்காணப்படும்இராணுவத்தினரின் வெளியேற்றத்தை கட்டுப்படுத்தவே புதிய முயற்சிகள் எடுக்கப்படுவதாகத் தெரிகின்றது. இதன் ஒருகட்ட நடவடிக்கையாக கடந்த ஒரு வார காலத்திற்குள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் டி பி. விஜயதுங்கா, கூட்டுப் படைத் தலைமைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்கள் உட்பட பல சிரேஷ்ட அதிகாரிகள் பல முகாம்களுக்கும் விஜயம்மேற்கொண்டனர். இதன் முதற் கட்டமாக முதலில் கிழக்கிற்கு விஜயம்செய்த இவர்கள் பின்னர் மூன்று தினங்களுக்குமுன் யாழ் குடாநாட்டு இராணுவ முகாம்களுக்கு விஜயம்செய்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுப்படை தளபதி மணலாறு விஜயம்

(கொழும்பு)

சிறிலங்கா கூட்டுப்படை தலைமைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்க, இராணு... இராணுவ அதிகாரிகள் மணலாறுக்குச் சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் அப்பகுதிக்கு சென்ற இவ்உயர் அதிகாரி...

...ப ஆசிரியராக தெரிவானோர்

## ...நேர்முகப் பரீட்சைக்கு ...செல்ல முடியாத நிலை

(...யாழ்ப்பாணம்)

...மாவட்டத்தில் ஆரம்ப ...த் தெரிவு செய்யப் ...களுக்கான நேர்முகப் ...இன்று வவுனியா கல் ...ணைக்களத்தில் நடை ...ள்ளது. இந்த நேர் ...ரீட்சைக்குத் தோற்ற ... நிலையில் யாழ் ...த்தைச் சேர்ந்தவர் ...யுறுகின்றனர். இன்றைய மேற்படி பரீட்சைக்கு கட்டாயமாக சமுகமளிக்க வேண்டுமென்று கோரப்பட்டிருக்கின்றது.

எனினும் இவர்கள் அங்கு செல்ல முடியாத நிலையில் உள்ளனர். இவர்களுக்கு வேறொரு திகதியில் இப்பரீட்சை நடைபெறுமா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை.

## திட்டமிடல் சேவை போட்டிப் பரீட்சை

...கை திட்டமிடல் ...க்கு ஆட்களைச் சேர்த் ...கொள்வதற்கான போட் ...டிப் பரீட்சைக்கு விண்ணப்பங் ...கோரப்பட்டுள்ளன.

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி...ள் பொருளியல், அரசியல், ...மூகவியல், புவியியல், வர்த்...க முகாமை, கணிதம், புள்ளிவிபரவியல் முதலான பாடங்களில் சிறப்புப்பட்டம் பெற்றவர்களாக அல்லது குறிப்பிட்ட பாடங்களில் பட்ட மேற்படிப்புத் தகைமையுள்ளவர்களாகவும், முப்பது வயதிற் குட்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும் இவ் விண்ணப்பங்கள் தொடர்பான விபரங்கள் கடந்த ஒக்டோபர் மாத வர்த்தமானியில் பிரசுரிக்கப் பட்டுள்ளதாக யாழ். செயலக திட்டமிடல் பணிமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## பரீட்சை முடிவுகளை மாற்ற லஞ்சம் பெற்றோர் கைது

(கொழும்பு)

...வியர் போட்டிப்பரீட்சை ...ில் மாற்றம் செய்து ...தாகக் கூறி லஞ்சம் ... இருவரைத் தலா ...000 ரூபா சரீரப்பிணையில் ... கொழும்புகோட்டை நீதிபதி அனுமதித்துள்ளார்.

...பரீட்சைத் திணைக்களத்தைச் சேர்ந்த ரி. சோமதாஸா கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த கே. ஆரியரெட்ணா ...ய இருவருமே பிணையில் ...ல அனுமதிக்கப்பட்டனர்.

இவர்கள் சிலரின் புள்ளிகளில் மாற்றம் செய்துள்ளதாக குற்றப் புலனாய்வுத்துறையின் விசாரணைகளிலிருந்து தெரிய வருகிறது. 18 புள்ளியை 78 ஆகவும், 38 புள்ளியை 88 ஆகவும் மாற்றியுள்ளனர். 23பரீட்சார்த்திகளிடம் இவர்கள் லஞ்சம் வாங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உயர் அதிகாரிகளின் பணிப்புரையின் பேரிலேயே இவர்கள் புள்ளிகளை மாற்றியதாக இவர்களைப் பிணையில் விடுவிக்க மனுச் செய்த வழக்கறிஞர் நீதிமன்றத்தில் கூறினார்.

...பரீட்சைத் திணைக்கள ...ன்னாள் பணிப்பாளருக்கு

இலங்கை செஞ்சிலுவை யாழ். கிளைக்கு

## வானொலிதொடர்பு வழங்க கூட்டுப்படை அனுமதி

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைக்கு வானொலி தொடர்பு வசதிகளை வழங்க கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி வழங்கியுள்ளதாக தெரியவருகிறது.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கொழும்பு தலைமையகத்துடன் தொடர்பு கொள்வதற்காகவே யாழ் கிளைக்கு நேரடித் தொலைபேசி வசதிகள் செய்யப்படவுள்ளன.

இதற்கான முயற்சியில் கொழும்பு தலைமையகம் ஈடுபட்டுள்ளதாக தெரிய வருகிறது இத்தொடர்பு சாதனம் அடுத்த வாரமளவில் இங்கு பொருத்தப்பட இருப்பதாகவும் இதனை இணைப்பதற்கு இரு பொறியியலாளர் கொழும்பிலிருந்து இங்கு வரவுள்ளனரெனவும் செஞ்சிலுவை வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஜெனீவா செஞ்சிலுவை முல்லை. விஜயம்

ஜெனீவா செஞ்சிலுவைச் சங்கக் குழு ஒன்று நேற்று முல்லைத்தீவைவந்தடைந்தது

ஜெனீவா நாட்டுப் பிரதிநிதிகள் இருவருடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி திரு. தயாளதேவாவும் இக்குழுவில் அடங்குகின்றார்

இக்குழு முல்லைத்தீவு மாவட்ட செஞ்சிலுவைச் சங்க தலைவர் திரு எஸ் சுந்தரத்தைச் சந்தித்து அப்பகுதிகளைச் சுற்றிப் பார்வையிடுவர்.

புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், துணுக்காய், பாண்டியன்குளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இடம்பெயர்ந்து அகதிகளாக இருக்கும் மக்களையும் செஞ்சிலுவைச் சங்கம் பராமரித்து வருபவர்களையும் பார்வையிட்டு இரு தினங்களில் திரும்பிச் செல்வர். (82)

## யாழ். அகதிமுகாம்களில் மூளைக் காய்ச்சல் அபாயம்

யாழ். குடாநாட்டில் இராணுவ நடவடிக்கைகளினால் ... பட்டுள்ளனர் என தெரியவருகின்றது இதனைத் தொடர்ந்து இலங்கைச் செஞ்சிலுவைச்...

## ...ன்னாள் பணிப்பாளருக்கு 3 வருட கடூழிய சிறை

(கொழும்பு)

...ட்சைத் திணைக்கள முன்னாள் பிரதிப் பணிப்பாளர் பேர்சி நாணயக்கார தனக்கு வழங்கப்பட்ட மூன்று வருடக் கடூழியச் சிறைத்தண்டனையை நீக்குமாறு கோரி தாக்கல் செய்த மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

...ருக்கு க. பொ. த. சாதாரண பரீட்சை போலிப் பெறுபேறுகளை கம்பியூட்டரில் பதிவு செய்து வழங்கியது, உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை போலியாக வழங்கியது என பல குற்றச் சாட்டுகள் இவர் மீது சுமத்தப்பட்டுள்ளது.

நாணயக்கார பரீட்சைத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## எம்மை எதிர்ப்பதே ...றலஉறுமயவின்நோக்கம்

### - தொண்டமான்

(கொழும்பு)

...ம்மை எதிர்க்க வேண்டும் ... உரிமைகளை அனுபவிவிடக் கூடாது என்ற ...க்கத்தை அடிப்படையாகக் கொண்டே, ஹெலஉறுமய ...யக்கம் செயற்படுகிறது என்று இ. தொ. கா. தலைவரும் கிராமிய தொழில்துறை ...சருமான எஸ் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இளைஞர்கள் எதிர்நோக்கும் சவாலும், சந்தர்ப்பமும் என்ற ஐந்து நாள் கருத்தரங்கின் ஆரம்ப விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்,

தனியார் மயமாக்கப்பட்ட தொழில் நிறுவனங்களில் தொழிலாளர்களுக்கு பத்து சதவீத பங்குகள் இலவசமாக வழங்கப்படுவது போல தோட்டத் தொழிலாளர்களுக்கும் பெற்றுக் கொடுப்பதற்காக தமது சங்கம் பாடுபடும் என்றும் 1993 மார்ச் 31 ஆம் திகதிக்குள்ளாக இது நிறைவேற்றப்படும் என்றும் குறிப்பிட்டார்.

## முடியுமானால் நிரந்தர படைக்கு 5,000 பேரைத் திரட்டுமாறு அஷ்ரப்பிற்கு சவால்

### மக்கள் காங்கிரஸ் விடுத்தது

(கொழும்பு)

...யுமானால் முதலில் ...ரம் பேரைத் திரட்டித் ...கள் என்று முஸ்லிம்காங் கட்சிக்கு சிறிலங்கா மக் ...ங்கிரஸ் சவால்விட்டுள்

...றிலங்கா படையில் முஸ் ... றெஜிமென்ட் அமைக்கப் ...டால் பத்தாயிரம்பேரைத் திரட்டித் தருவதாக முஸ்லிம் காங்கிரஸ் கூறியிருப்பது தெரிந்ததே. அதற்குப் பதிலளிக்கும் முகமாக மக்கள் காங்கிரஸ் விடுத்த அறிக்கையில் மேலும் நிரந்தர படைப்பிரிவில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு ஐயாயிரம் பேரை முஸ்லிம் காங்கிரஸ்திரட்டித்தரட்டும் என்று சவால் விட்டுள்ளது.

...றுள்ளனர் என்றும், இவர்களின் விடுமுறைமுடிந்துதிரும்பிய பின்னரே ஓடியோர் தொகையைச் சரியாகக் கணிப்பிட முடியும் என்றும் தெரிய வருகின்றது.

இவ்வாறாக அதிகரித்த

சிறிலங்கா கூட்டுப்படை தலைமைத் தளபதி ஜெனரல் ஹமில்ரன் வனசிங்க, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்திய ரத்தின ஆகியோர் உட்பட பல

...லாறுக்குச் சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் அப்பகுதிக்கு சென்ற இவ் உயர் அதிகாரிகள் அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்ததுடன் எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் அங்குள்ள அதிகாரிகளுக்கு விளக்கியதாக இலங்கை வானொலி அறிவித்தது.

### வவுனியா பகுதியில்

## சிங்களப் பயணிகள் மீது படையினர் தீவிர விசாரணை

(வவுனியா)

வவுனியா ஆஸ்பத்திரி சந்தியிலுள்ள புத்தர் சிலைக்கு அண்மையில் வைத்து பஸ்சில் பயணம் செய்யும் சிங்களவர் கடும் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. படையிலிருந்து பெருந்தொகையானோர் தப்பி ஓடுவதனாலேயே இந்நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் தொடக்கம் இப்பகுதியில் வைத்து வாகனங்களில் பயணம் செய்யும் சிங்களவர்கள் மட்டும் இறக்கப்பட்டு தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். அலுவலகங்களில் பணிபுரியும் சிங்கள ஊழியர் தவிர ஏனையோர் மீது கடும் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

## பலாலியிலிருந்து ஷெல் வீச்சு தேவாலயம், பாடசாலை சேதம்

(யாழ்ப்பாணம்)

பலாலி சிறிலங்கா இராணுவத்தினர் மக்கள் குடியிருப்புகள் மீது நள்ளிரவு வேளை நடாத்திய எறிகணைத் தாக்குதல்களால் தேவாலயம், பாடசாலை, வீடுகள் என்பன சேதமடைந்ததுடன் இருவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. நேற்று முன்தினம் நள்ளிரவு பலாலி முகாமிலிருந்து பண்டத்தரிப்பு பகுதி நோக்கி ஏவப்பட்ட பல எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததில் தென்னிந்திய திருச்சபை மற்றும் அம்மன் வீதி, சில்லாலை வீதிகளில் உள்ள பல வீடுகளும் சேதமடைந்தன.

அத்துடன் பிள்ளையார் கோவில் பகுதியில் வீழ்ந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மானிய உதவிகளை நிறுத்த உலக வங்கி வற்புறுத்து

(யாழ்ப்பாணம்)

வளர்ச்சி அடைந்து வரும் நாடுகள் தமது மக்களுக்கு வழங்கும் மானிய உதவிகள் அனைத்தையும் நிறுத்துமாறு இந்நாடுகளுக்கு உலகவங்கியும் சர்வதேச நாணய நிதியமும் சிபார்சு செய்துள்ளன.

இவ்வாறான விதப்புரைகளை உதவி பெறும் சார்க் நாடுகளின் பொருளாதாரக் கமிசன் வன்மையாகக் கண்டித்திருக்கிறது. 14 நாடுகள் அங்கம் வகிக்கும் மேற்படி பொருளாதாரக்கமிசன் இவ்வாறான விதப்புரைகளை கடுமையாக எதிர்க்கும்படி தனது உறுப்பு நாடுகளிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

இவ்வாறான மானிய உதவிகள் நிறுத்தப்பட்டால் தென்கிழக்காசியாவில் பல லட்சக்கணக்கான மக்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்க வேண்டி வரும் எனவும்அத்துடன் தென்னாபிரிக்காவில் பல லட்சக்கணக்கான மக்கள் மடியும் நிலை உருவாகும் என்றும் மேற்படி கமிசனின் உதவித் தலைவர் விக்டர்ராஜா கொழும்பில் பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்த மக்கள் தங்கிருக்கும் முகாம்களில் மூளைக்காய்ச்சல் வெகுவாகப் பரவும் அபாயம் தோன்றியுள்ளது எனத் தெரியவருகின்றது

யாழ். இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினால் பராமரிக்கப்பட்டுவரும் அகதிமுகாம்களில் இருந்து இரண்டு பேர் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரியவருகின்றது இதனைத் தொடர்ந்து இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினர் மேற்கொண்ட முயற்சியினால் இந்நோயாளிகளின் குருதி பரிசோதிக்கப்பட்டு இதில் மேற்படி நோயிற்கான காரணி இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது

மேலும் இந்நோய்க் காரணியைப் பரப்பும் நுளம்பு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கல்முனைப் பகுதியில் படையால் மீனவர் கைது

பூநகரி கல்முனைப் பகுதியில் கடற் றொழிலில் ஈடுபட்டு நின்ற மீனவரைக் கட்டு மரமொன்றில் வந்த சிறிலங்கா இராணுவம் கைது செய்து தம்முடன் கொண்டு சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாஷையூர் மேஜர் சலீம் வீதியைச் சேர்ந்த மரியதாஸ் சுரேன் (வயது 20) என்பவரே சிறிலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்டவராவார்.

அவருடன் கூடச் சென்ற மரியதாஸ் மதன் (வயது 14) என்பவர் கடலில் தூர நின்றதால் தப்பிவந்துள்ளார்.

இச்சம்பவம் கடந்த 28 ஆம் திகதி மாலை 4.00 மணியளவில் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.குடாக்கடலில் கடற்படைப்படகு நடமாட்டம்

(குருநகர்)

குடாநாட்டின் தென்பகுதிக் கடல் பிராந்தியத்தில் சிறிலங்கா கடற்படை ரோந்துப் படகுகளின் நடமாட்டம் நேற்று அதிகரித்துக் காணப்பட்டதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் ஒன்றுக்கு மேற்பட்ட பாரிய கப்பல்கள் நங்கூரமிட்டு நின்றதாகவும்.

அவை அன்றிரவே திரும்பிச் சென்றுள்ளதாகவும் மீனவர்கள் தெரிவித்தனர். (21)

**நாட்டில் வனத்தைக் காத்து**
**நாட்டின் வளத்தைக் காப்போம்**

## வரி விளம்பரம்

### தேவை

மிருதங்க வேலைகள் பழக்கினால், செய்யக்கூடிய ஆர்வமுள்ள இளைஞர்கள் தேவை. நல்ல சம்பளம் கொடுக்கப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார், மிருதங்க தொழில் நிலையம், 192/1 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (3537)

### தமிழ் அகராதி

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, மற்றும் ஓவியம், சினிமா, நாவல், சிறுகதை, அரசியல், இலக்கியம் போன்ற தரமான நூல்களும், துளிர், சலனம், சுபமங்களா போன்ற சஞ்சிகைகளும் விற்பனையாகின்றன. விபரங்கட்கு: வசந்தம் புத்தக நிலையம் 405, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [3218]

### அநுமதிப் பரீட்சை (ஆண்டு 6)

பிரபல பாடசாலைகளுக்கான ஆண்டு 6, மாதிரி அநுமதிப் பரீட்சை 01-11-92 ஞாயிறு மு. ப. 8-00, மு. ப. 10-00 நேரங்களில் நடைபெறும். ஆண்டு 6 அநுமதிக்கான துரித மீட்டற் பயிற்சியை பெற்றுக்கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (3551)

### மாணவருக்கான கையேடு

''பரீட்சைகளுக்கான ஆயத்தமும் அவற்றை வெற்றிகரமாக எதிர் கொள்ளலும்'' உளவியல் சஞ்சிகை தனிப் பிரதி ரூபா 12-00. தேவையானோர் பதினைந்து ரூபா முத்திரை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். முகவரி ஜோ. எக்கட்டன் 193 கொழும்புத் துறை வீதி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி எதிர் ஒழுங்கை— சுண்டிக்குளியில் பெற்றுக் கொள்ளலாம். (சி-5231)

### ராகு, கேது, செவ்வாய் மாற்றம்

ராகு, கேது, செவ்வாய் மாற்றங்களால் 04-11-92 முதல் உங்களுக்கு எப்படி? கைரேகை சாஸ்திரமும் அடங்கியது ரூபா 7-50. பாடசாலை நூல்களுக்கும் உபகரணங்களுக்கும் மொடர்ன் ஸ்ரோர்ஸ் நெல்லியடிச் சந்தி. மது புத்தகசாலை, கொக்குவில் சந்தி. (3550)

### விற்பனைக்கு உண்டு

பிறவுண், கறுப்பு, வெள்ளை

# அகதி முகாம்களில் தங்கியிருப்போர் வாக்காளர் இடாப்பில் பதிய முடியாது

- தேர்தல் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கு. கிழக்கு மாகாணத்திலிருந்தும், இந்தியாவிலிருந்தும் வந்துள்ள தமிழ் அகதிகள் தங்கியிருக்கும் முகாம்கள் அமைந்துள்ளபிரதேசங்களைச் சேர்ந்த தேர்தல் திணைக்களத்தில் வாக்காளர்களாக தம்மைப் பதிவு செய்ய அனுமதிக்கப் படமாட்டாது என்று தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் கூறியுள்ளன.

அவர்கள் தாம் இடம்பெயர்வதற்கு முன்பிருந்த சொந்த இடங்களில்வாக்காளர் இடாப்புக்களிலேயே அவர்களின் பெயர்கள் பதிவுசெய்யப்படவேண்டுமென்றும், அவ் வட்டாரங்கள் மேலும் கூறியுள்ளன.

முகாம்களில் தற்காலிகமாகவே இவர்கள் தங்கவைக்கப்பட்டிருப்பதாகவும், ஆகையினால் முகாம்கள் உள்ள பகுதிகளின்வாக்காளர் இடாப்பில் இவர்களது பெயர்களைப் பதிவு செய்ய முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தையல் இயந்திரமின்றியே பயிற்சி வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்ப் பிரிவு இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளையின் தையல் பயிற்சி வகுப்பில் தையல் இயந்திரமின்றி பயிற்சி வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஐந்து மாதங்களாக மேற்படி நிலையத்தில் 80 மாணவிகள் தையல் பயிற்சி பெற்று வருகின்றனர். இவர்களுக்கான பயிற்சி இன்னும் ஒரு சில வாரங்களில் முடிவுற இருக்கின்றது. இந் நிலையில் இன்றுவரை அங்கு எந்தவிதமான ஒரு தையல் இயந்திரத்தில்கூட மாணவிகளுக்கு பயிற்சி வழங்கப்படவில்லை என தெரிய வருகிறது.

இது தொடர்பாக அங்கு கல்வி கற்கும் மாணவி ஒருவர் கருத்து தெரிவிக்கையில்; நாம் மிகவும் ஆவலுடன் தையல் பயிற்சி வகுப்புக்கு வந்தோம். தையல் உரிய முறையில் கற்ற போதிலும் இதுவரை தையல் இயந்திரத்தையேநாம் கண்ணால்கூட காணவில்லை. இந்நிலையில் எவ்வாறு அடுத்த மாதம் நாம் பயிற்சியை பூரணமாக பூர்த்தி செய்வது எனக் கவலையுடன் கேள்வி எழுப்பினார். இதே வேளையில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மேற்படி தையல் பயிற்சி வகுப்பிற்கு புதிய தையல் இயந்திரம் ஒன்று இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையால் வழங்கப்பட்டதாக செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

## அரச தனியார் ஆசிரியருக்கு வீடமைப்புக் கடன்

(கொழும்பு)

அரசாங்க பாடசாலைகளிலும் மற்றும் தனியார் பாடசாலைகள் அங்கீகரிக்கப்பட்ட பிரிவேனாக்களிலும் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு குறைந்த வட்டிவீதத்துடன் வீடமைப்பு கடன் வழங்கும் திட்டம் ஒன்றை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத் தாபனம் ஆரம்பித்துள்ளது.

இக் கடன்களுக்கு 18 5 சத வீத வட்டி அறவிடப்படும் எனவும் அத்துடன் கழிக்கப்பட்ட தொகைகளை கணக்கிலெடுத்து வட்டி விகிதம் அறவிடப்பட உள்ளது என மேற்படி கூட்டுத் தாபனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் ஈ. ஏ. மெத்தானந்தா தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் ஒருவர் தனித்தோ அல்லது மனைவியுடன், பெற்றோர் பிள்ளைகளுடன் இணைந்தோ கடன் பெறலாம் எனவும் விண்ணப்பதாரி அறுபது வயதுக்குட்பட்டவராகவும் ஏற்கனவே சேமிப்புத் திட்டத்தில் சேர்ந்தவராகவும் இருத்தல் வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இக் குறைந்த கடன் வட்டி விகிதத்தின் கீழ் 25000 ரூபாவில் இருந்து 1,50,000 ரூபா வரை கடன் வழங்கப்பட உள்ளது.

அரச ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில் கடன்மனு, மனுதாரரின் சம்பளத்தை உறுதிப்படுத்தும் பிரிவுக் கல்விப் பணிப்பாளர் அவர்களின் கடிதம் இணைக்கப் படவேண்டுமெனவும் தனியார் பாடசாலைஆசிரியர்கள் தமதுபாடசாலை அதிபரினால் தமது சம்பளத்தை உறுதிப்படுத்தும் கடிதத்தை சமர்ப்பிக்கலாம் எனவும் இக் கடன் பற்றிய மேலதிக விபரங்களை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்தில் அல்லது மாவட்ட கிளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## வவுனியா ஆஸ்பத்திரியில்

### நத்தாரை முன்னிட்டு போட்டிகள்

(குருநகர்)

கத்தோலிக்க கலை, இலக்கியவட்டம் நத்தார்திருநாளை ஒட்டி நாடகம், குட்டிக்கதை கவிதைப்போட்டிகளைநடத்த முன்வந்துள்ளது.

''சமகால நிகழ்வோடு கிறிஸ்து பிறப்பு'' என்னும் பொருளில் சகல போட்டிகளும் நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பங்குபற்றுவோர் அடுத்த மாதம் 20 ஆம் திகதிக்குமுன்பாக 60, கோவில்வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு கத்தோலிக்க கலை, இலக்கிய வட்டத்துடன் தொடர்பு கொண்டு சகல விபரங்களையும் பெற்றுக் கொள்ளலாம். (12)

## கரிநாள் சம்பவங்கள் 10பேர் தடுத்து வைப்பு

(கொழும்பு)

கொழும்பில் பண்டாரநாயக்கா மாவத்தைப் பகுதியில் கரிநாள் அனுஷ்டித்த போது நடைபெற்ற தாக்குதல், கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக கைது செய்யப்பட்டவர்களில் பத்துப் பேர் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து 15 பவுண் கொள்ளை நகைகளும் மீட்கப்பட்டுள்ளதாகவும் இச் சம்பவம் தொடர்பாக மேலும் இரு சந்தேக நபர்களை கெசல்வத்தைப் பொலிசார் தேடி வருகின்றனர் எனவும் தெரிய வருகின்றது.

மேலும் கொழும்பு மத்திய வீதியில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக புறக்கோட்டைப் பொலிசாரினால் ஏழுபேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

### திருக்கலியாண உற்சவம்

கொழும்புத்துறை ஆத்தியம்பதி அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகரர் விநாயகர் ஆலயத்தில் இன்று மாலை திருக்கலியாண உற்சவம் விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாட்டுடன் இடம்பெறும்.

ஆலயப்பிரதமகுருபிரம்மஸ்ரீ க மு. ஜெகநாதக்குருக்கள் தலைமையில் திருக்கலியாணஉற்சவம் நடைபெறும். (24)

★ ★

கொழும்புத்துறை மேற்கு அருள்மிகு ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆலயத்தில் நடைபெற்ற கந்தசஷ்டி கால கந்தபுராண தொடர் விரிவுரை பூர்த்தி விழா இன்று மாலை முதலாம் தி.திருக்கலியான வைபவத்தின் போது நடைபெறும். (24)

★ ★

### வள்ளி திருமணம்

வல்வெட்டித்துறை. தீருவில் வயலூர் ஸ்ரீ முருகன் தேவஸ்தானத்தில் கந்தசஷ்டி விழாவை முன்னிட்டு தொடர்ந்து கானகதாவாரிதி கந்தர்மடம் பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மாவினால்

### சுற்றாடல் பாதுகாப்பு திட்டம் தயாரிப்பு

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் சுற்றாடல் மாசுபடுவதை தடுப்பதற்கு யூ எஸ். எய்ட்ஸ் ஸ்தாபனம் உதவி வழங்குவதற்கு முன்வந்துள்ளது

இதற்காக ஒரு விரிவான திட்டத்தைத் தயாரித்து அனுப்பும்படி மேற்படி ஸ்தாபனம் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்திடம் கேட்டுள்ளது.

யாழ். அரச அதிபர் திரு.கா. மாணிக்கவாசகரின் ஆலோசனையுடன் சுற்றாடல் மாசுபடுவதை தடுப்பது பற்றிய விரிவான திட்டம் ஒன்றை இணையம் தயாரிப்பதில் தற்போது ஈடுபட்டு வருவதாக இவ் இணையத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (42)

### மூக்குக் கண்ணாடி வழங்கப்படும்

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் கல்வி பயிலும் கண் பார்வை குறைந்த மாணவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



**2-ம் லெப். மதுவன்**

[தவராஜசிங்கம் விஜயசேகரன்]

வீரப்பிறப்பு 1972-02-24 — வீரச்சாவு 1990-11-0


தொழுதால் தீராது தொல்லை
என உணர்ந்தே
எழுந்தாய் போராட எம் புதல்வா!
உன் நினைவு எம்மிடத்தில்

கண்ணீரால் கரைந்திடுமா?
காலத்தால் ஆறிடுமா?
மண்ணின் விடுதலையில்
வையகத்தில் நீ வாழ்வாய்...!

- குடும்பத்தினர்

மீசாலை தெற்கு,
மீசாலை [3531]

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தமிழ் மண்ணில் உறவாட
1974. 07. 05

தமிழ் மண்ணை மீட்டெடுக்க
1992. 10. 02

**சவரிமுத்து அலெக்ஸ்சாண்டர் (துரை**

(நகீரன்)

விழி! எழு! விடுதலை! வேட்கை கொள்!
பொங்கி கிளர்ந்து போராடு அடிமைத்தளை
அறுத்தெறி வெற்றி கொண்டு வா! கட்டைக்காட்டில்
எதிரி அவன் இயம்புகின்ற நேரத்தில் நகீரா
வீழ்த்தினாய் உன் பலத்தால் கண்
இமைக்கும் நேரத்தில் உன்உயிர் சாய்ந்ததையா

## விற்பனைக்கு உண்டு

பிறவுண், கறுப்பு, வெள்ளை சேவல், பேட்டுக் குஞ்சுகள், புறொய்லர் உடன் விற்பனைக்குண்டு. ''மல்லிகா பதி'' மாக்கற் லேன், மானிப்பாய். (3562)

---

## தவறிவிட்டது

நல்லூர் கந்தசுவாமி கோவிலில் நேற்று மாலை நாவலர் வீதியில் உள்ள திருமதி இ. குருநாதன் என்பவருடைய தாலிக்கொடி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் தயவு செய்து ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (3563)

---

## பனம்விதை நாட்டப்பட்டது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பனம் விதைகள் நடப்பட்டு வருகின்றது

கிராஞ்சி, வேரவில், பல்லவராயன்கட்டு, முழங்காவில் ஆகியபகுதிகளில் பனம்விதை நடும் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது இம் முயற்சியில் பூநகரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் பல்லவராயன்கட்டுசோலை, கிராஞ்சி, வேரவில் மகளிர் குழுக்கள் மற்றும் முழங்காவில் பாடசாலைமாணவர்கள் ஆகியோர் ஈடுபட்டுள்ளனர்.

## ஆதாரம் காட்டி பெறவும்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி 7ஆம் நாள் திருச்சபை மண்டபத்தில் பெண்களுக்குரிய பணப்பையொன்று பெறுமதிமிக்க பொருள்களுடன் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் எமது அலுவலக நேரத்தில் நேரில் வந்து ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

---

# வவுனியா ஆஸ்பத்திரியில் டாக்டர் பற்றாக்குறை

(வவுனியா)

வவுனியா மாவட்ட ஆதார வைத்தியசாலையை வைத்திய நிபுணர்கள், சத்திரசிகிச்சை நிபுணர், பெண் நோய் வைத்தியர்கள் ஆகியோரை நியமித்து தரம் உயர்த்தும்படி சுகாதார மற்றும் மகளிர்விவகார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத்திடம் மகஜர் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; வவுனியா ஆதார வைத்திய நிலைய சத்திரசிகிச்சை நிலையம் பலவருடங்களாக கவனிப்பாரற்றுக் கிடப்பதனால் சிறு சத்திர சிகிச்சைகளுக்கு கூட அனுராதபுர ஆஸ்பத்திரிக்கே செல்லவேண்டியுள்ளது. இங்கும் ஆபத்தான நிலையில் உள்ளோர் வழியில் இறக்கவும், மொழிபுரியாமல் பல நோயாளிகள் அவஸ்தைப்படவும் வேண்டியுள்ளது.

மேலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, நெடுங்கேணி ஆகிய இடங்களில் இருந்தும் நோயாளிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமூலமே கொண்டு வரப்படுகின்றனர்.

ஆகவே இவற்றை கவனத்தில் கொண்டு ஆஸ்பத்திரியின் அத்தியாவசிய சேவையை பூர்த்தி செய்ய வேண்டும் என அம்மகஜரில் கேட்கப்பட்டுள்ளது.

# பங்களாதேஷ் கப்பல் திருமலையில்தடுத்துவைப்பு

(பங்களாதேஷ்)

பங்களாதேஷ் நாட்டைச் சேர்ந்த ''அல் பிசம்'' என்னும் கப்பல் திருக்கோணமலைத் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. 2,020 மெற்றிக் தொன் நிறையுடைய பைகளை திருக்கோணமலை பிறிமா ஆலைக்காக எடுத்து வந்த இக் கப்பல் துறைமுக கட்டண நிலுவைகளைச் செலுத்தவில்லை என்பதற்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளது இக்கப்பல் திருமலை துறைமுகத்திற்கு வந்திருப்பது இதுவே முதல்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

மாலைதீவு அரசை கவிழ்க்க சதி செய்த

# புளொட் இயக்கத்தினர் 11 பேர் விடுதலை

(மாலே)

1989 ஆண்டு நவம்பர் மாதம் ஆயுதப் புரட்சி மூலம் மாலைதீவு அரசாங்கத்தை கவிழ்க்க முயன்று தோல்வி கண்ட 'புளொட்' இயக்கத்தைச் சேர்ந்த 11 பேரை மாலைதீவு அரசாங்கம் விடுதலை செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

இவர்களை இம் மாதம் மாலைதீவு அரசாங்கம் இலங்கைக்கு அனுப்பி வைத்தது என்றும், தோல்வியுற்ற புளொட் குழுவின் 6 பேர் இன்னமும் விடுதலை செய்யப்படவில்லை என்றும், இவர்கள் தீவு ஒன்றில் சிறை வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

---

டர்ந்து கானகத வாரிதி கந்தர்மடம் பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மாவினால் நிகழ்த்தப்பட்டு வந்த 'கந்த வேள் கருணை' பற்றிய தொடர் விரிவுரை இன்று பிற்பகல் 3 மணிக்கு ஸ்ரீவள்ளி திருமணத்துடன் பூர்த்தியாகும். சிறந்த பக்க வாத்திய சகிதம் மேற்படி விரிவுரை நிகழ்த்தப்படும்.

குக் கண்ணாடி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

கண்பார்வை குறைந்தவர்கள் அண்மையில் பெற்றுக் கொண்ட கண் பரிசோதனை அறிக்கையை அதிபரின் சிபாரிசுடன் கல்வித் திணைக்களத்துக்குச் சமர்ப்பிக்குமாறுயாழ். கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (42)

---

எதிரி அவன் இயம்புகின்ற நேரத்தில் நகீரா
வீழ்த்தினாய் உன் பலத்தால் கண்
இமைக்கும் நேரத்தில் உன்உயிர் சாய்ந்ததையா
மறத்தமிழா! உன் பாதை வழி வந்து தொடருவோம்
உன் பணியை நாங்கள்....

இவருடன் வீரச்சாவடைந்த அனைத்துப் போராளிகளுக்கும் வீரவணக்கங்கள்.

கரம்பன் தெற்கு, அம்மா, அப்பா,
மெலிஞ்சிமுனை. (3560) அண்ணமார், அக்காமார்

---

# "நினைவு மலரின் 2ஆவது இதழின் உதிர்வு"

| வீரப்பிறப்பு | | வீரச்சாவு |
|---|---|---|
| 08 |  | 01 |
| — | | — |
| 08 | | 11 |
| — | | — |
| 1968 | | 1990 |

## மேஜர் சங்கர்

[அரியரட்ணம் லவலோகிதன்]

தம்பலகமம் திருக்கோணமலை

அன்னைதன் பாசம் நெஞ்சினுள் அமிழ்க்கி. அன்னை
மண்பாசம் - கண்ணீரைத் தந்திட,
எண்பத்தைந்தினில் எழுந்த இச் சுடரினால் கோணமா
மலையது பெருமிதம் கொண்டது
சங்கரென்றாகிச் சரித்திரம் படைத்திட ''கடவான''
களம்தனை முதலினில் கண்டவன் - பல
வெங்களமாடிச் சிங்களம் தடுக்கையில் வீழ்ந்திடச்
சிவந்தது மணலாறு
மனமது விரும்பிய சீருடை அணிந்திட விரைந்து திரும்
புவேன் எனப் பகன்றான் - ஈழ
மண்மகள் பதறிட, நண்பர்கள் விம்மிட, புலிமகன்
அன்று மா வீரனானான்.

(3554)

- நண்பர்கள்

---

# நினைவு கூருகின்றோம்...

## 1992-11-01

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் முழங்காவில் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய-

★ **வினோத்** (ஆ. அல்போன்ஸ் ஜெயானந்தம் - நாவாந்துறை - யாழ் )

முழங்காவில் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் சிறிலங்காப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 10 க்கும் மேற்பட்ட பொதுமக்கள்.

1990ஆம் ஆண்டு மணலாறு முந்திரிகைக்குளம் சிறிலங்காப்படை மினிமுகாம் தகர்ப்பில் வீரச்சாவெய்திய-

**மேஜர் சங்கர்** (அரியரட்ணம் லவலோகிதன்- தம்பலகமம் - திருக்கோணமலை)

**முசோலினி** (ஆபிரகாம் தயாளசீலன்-7-ம் வட்டாரம் கட்டைபறிச்சான் - திருக்கோணமலை)

**2-ம் லெப்.மதுவன்** (தவராஜசிங்கம் விஜயசேகரன் மீசாலை தெற்கு - சாவகச்சேரி)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்ட வந்தாறுமூலையைச் சேர்ந்த தமிழ் இளைஞன்.

ஆகியோரை இந்நாளில்

நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-5335)

சிந்தனைக்கு

பொதுவாக, உண்மையான விவேகம், அசைக்க முடியாத உறுதியே.

- நெப்போலியன் போனபர்ட்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்- 01-11-1992

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308

த. பெ. எண் - 05

## பாராட்டுக்குரியவர்கள்

பயணிகள் போக்குவரத்துப் பாதையில் வெடி குண்டு வைத்து, தமிழ் மக்களைப் படுகொலை செய்ய சிங்கள இராணுவம் மேற்கொண்ட நாசகார சதி வேலை இன உணர்வு மிக்க இரு தமிழ் மக்களின் நடவடிக்கையால் அம்பலப்படுத்தப்பட்டுள்ளது. சிறிலங்கா இராணுவத்தின் இச் சதித் திட்டத்தை அம்பலத்திற்குக் கொண்டு வந்த இவ் இருவரும் பாராட்டுக்குரியவர்கள் என்பதோடு, முன்னுதாரணமும் ஆனவர்களாகும்.

அதாவது, இராணுவத்தினரின் சதிக்கு உடந்தையாக இருப்பது போல் செயற்பட்டு சிங்கள இராணுவத்தின் சதித் திட்டத்தை வெளிக்காட்டிய ஓமந்தையைச் சேர்ந்த சிவனு கந்தசாமியும் பல்லவராயன் கட்டைச் சேர்ந்த பெண்மணியான நவரத்தினம் இராசமணியும் மேற்கொண்ட துணிகரமான நடவடிக்கையானது அவர்களுக்குப் பெருமை சேர்த்துள்ளது என்பதோடு, தமிழினத்திற்கும் பெருமை சேர்க்கும் விடயம் என்பதில் சந்தேகமில்லை.

சிங்கள இராணுவம், எந்த வகையிலாயினும் தமிழ் மக்களைப் படுகொலை செய்வதையும் தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை தோற்கடிப்பதையுமே நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன் மூலம் தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்கத் திட்டமிட்டுள்ளது.

சிங்கள இராணுவத்தின் முதலாவது நாசகார வேலையல்ல இது. இவ்வருடம் ஏப்ரல் மாதத்தில், கொம்படியில் இடம் பெற்ற ஒரு குண்டு வெடிப்பும் அதனால் பன்னிரண்டிற்கு மேற்பட்ட அப்பாவித் தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்டதுமான நாசகாரச் செயலின் தொடர்ச்சியே இது. இதே வேளை, சிங்கள இராணுவத்தின் சதித்திட்டம் அம்பலப் படுத்தப்பட்டுள்ளதினால், இதுவே அவர்களின் இறுதித்திட்டம் எனவும் கொண்டுவிட முடியாது. சிங்கள இராணுவத்தின் நாசகார நடவடிக்கைகளுக்கு உடந்தையாகவுள்ள சிலர் புலிகளின் கட்டுப்பாட்டினுள் உள்ள பகுதிக்குள் வெடிப்

# தமிழர்களின் எழுச்சியின் போதெல்லாம் இந்தியா சிங்களவருக்கு உதவியது

## முஸ்லிம்களிடம் இருந்து பௌத்தத்தைக் காப்பாற்றியது இந்தியாவே

1983இல் இன முரண்பாடுகள் வெடித்ததையடுத்து இந்திய இலங்கை உறவுகள் பாதிக்கப்பட்டன. 1987 இல் இந்திய-சிறிலங்கா உடன்படிக்கை கைச்சாத்தாகியது. ஆனால் இந்த உடன்படிக்கையின் மூலம் ஈழக்கோரிக்கைக்கு சாவுமணி அடிக்கப்படுகிறது என்பதை உணர்ந்து விடுதலைப்புலிகள் இதனைத் தீவிரமாக எதிர்த்ததன் உள்ளார்த்தத்தை சிங்களவர்கள் உணராமல்போனது துரதிர்ஷ்டமானதே.

இந்த உடன்படிக்கையின் முக்கியமான மூன்று அம்சங்கள் வருமாறு:

1. தமிழ் மக்களுக்கான அதிகாரப் பரவலாக்கல்.
2. இலங்கையின் ஐக்கியப்பட்ட தன்மை
3. இந்தியாவின் பாதுகாப்புத் தொடர்பான விடயங்கள்.

இந்த உடன்படிக்கைதொடர்பான விமர்சனங்களின்போது இதில் வலியுறுத்தப்படும் பரஸ்பர தன்மைகள் பெரும்பாலும் கவனிக்கப்படுவதில்லை. இதில் முக்கியமான தேவைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதை பெரும்பாலானோர் அவதானிக்கவில்லை.

இலங்கையின் ஒருமைப்பாடு இந்தியாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்தியாவின் பாதுகாப்பிற்கு குந்தகம்விளைவிசகக் கூடிய வெளிச் சக்திகளின் தலையீட்டிற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது

இவை நியாயமானவையல்லவா?

ஆனால் அதிகாரத்தைக் கைப்பற்றப்பாடுபட்ட ஜே.வி.பி. யினர் இந்திய இராணுவத்தின் பிரசன்னத்தைக் காட்டி அரசியல் நடத்த முற்பட்டனர். அந்த முயற்சியில் அவர்கள் வெற்றிபெறவில்லை இதனால் அவர்கள் உடன்படிக்கையைமுன்னிலைப்படுத்தி எதிர்த்து தாம்புரிந்த கொலைகளுக்கான நியாயத்தைத் தேட முற்பட்டனர்.

இந்திய இராணுவத்தினர் வடக்கிலும், கிழக்கிலும் செயற்பட்டமையினால் தான் சிறிலங்கா இராணுவத்தினர் விடுவிக்கப்பட்டு ஜே. வி. பியினரின் கிளர்ச்சிகளை நசுக்க முடிந்தது அந்த நேரத்தில் இந்திய இராணுவத்தினர் இல்...

...கள். இந்து சமயமானது மிசனறி நடவடிக்கை மூலம் எந்த நாட்டிலும் பரப்பப்பட்டதாக இல்லை. இவ்விடத்தில் சோழர்களின் தமிழர்களின்) படையெடுப்புக்களை இந்தியப் படையெடுப்புக்களாகக் கருதிக் குழம்பக்கூடாது.

### வரலாறு

சோழர்கள் (தமிழர்கள்) இலங்கைக்குள் படையெடுப்பு நடத்தி ஊடுருவிய போதெல்லாம் ஏனைய இந்திய அரசுகள் சோழ படைகளை தாக்கியதன் மூலம் உதவிகள் புரிந்துள்ளனர். இந்தியா என்றால் தமிழர்கள் தான் என்ற தவறான கருத்து இங்கு நிலவுகின்றது தமிழர்கள் இந்திய சனத்தொகையில் ஆறு சதவிகிதத்திற்கும் குறைவானவர்களே.

இந்தியாவில் இருக்கும் மிகப் பெரும்பான்மையான இந்துக் குடித்தொகையினாலேயே இலங்கை முஸ்லிம் நாடாக மாறாமல் தப்பிக்கொண்டது. இல்லையேல் முன்பு பௌத்த நாடுகளாக இருந்த மாலைதீவ,மற்றும் இந்தோனேசியா, மலேசியா போன்ற நாடுகளைப் போல முஸ்லிம் நாடாகியிருக்கும்.

அண்மைக்காலத்திலும் கூட பங்களாதேசிலிருந்து பெரும்பாலான அகதிகள் இந்தியாவுக்குட் புகுந்த நிலையில் இந்தியத் துருப்புகள் அங்கு சென்று பிரச்சினையைத் தீர்த்து வைத்த பின்னர் தாயகம் திரும்பின. மாலைதீவில் ஒரு சதி முயற்சி நடந்த போது அங்கு உதவிக்கு சென்ற இந்தியத் துருப்புகள் தமது பணி முடிந்ததும் நாடு திரும்பின. இங்கிருந்தும் கூட திரும்பிச் செல்லுங்கள் என்று கேட்ட உடனேயே அவர்கள் விலகிக் கொண்டனர். ஒரு ஆக்கிரமிப்பு இராணுவம் இவ்விதம் நடந்து கொள்ளுமா?

இந்தியா தனது அயல்நாடுகளுடன் சர்ச்சைக்கு உள்ளாகி வருகிறது என்று சொல்லப்படுகிறது. பாகிஸ்தான் இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்து முஸ்லிம் பிரிவினைவாதிகளால் துண்டாடப்பட்டது. மத அடிப்படையிலான இந்தப் பிரிவினையை அடியொற்றியே தமிழர்களும் இங்குசெயற்படுகின்றனர்.

இந்தியா இலங்கையின் கொள்கைகள் மற்றும் செயல்கள் குறித்துக் கவலைப்படாமல் இருக்க முடியாது. கியூபாவில் சோவியத் ஏவுகணைகள் வைக்கப்படுவதற்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எப். கென்னடி எதிர்ப்புத் தெரிவித்தார். கியூபா இறைமையுள்ள தனி நாடாக இருந்தாலும் அமெரிக்காவின் பாதுகாப்புக்கு இது அவசியமானதே.

இதே போலத்தான் இந்தியாவின் பாதுகாப்புக் கவலை குறித்துச் சிறிலங்காவும் அக்கறை காட்ட வேண்டும். இது தற்பாதுகாப்பு அடிப்படையிலானதேயன்றி பெரிய மனிதத் தோரணையிலானதோ அல்லது ஆக்கிரமிப்பு நோக்கம் கொண்டதுவோ அல்ல. ஆனால் சுதந்திரமடைந்த காலம் தொட்டே இலங்கை அவ்வாறு நடந்து கொள்ளவில்லை. இறைமையுள்ளதனிநாடு என்ற வகையில் எப்படியும் நடந்து கொள்ளலாம் என்பதுவே சிறிலங்கா ஆட்சியாளரின் கருத்தாக இருந்துள்ளது.

இதனால் தான் தமிழர்களின் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்துப் போராளிகளுக்குப் பயிற்சி அளிப்பதுபோன்ற ஆரோக்கியமற்ற அணுகுமுறைகளை இந்தியா கடைப்பிடிக்க நேர்ந்தது.

இவ்விடயத்தில் அமரர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க மட்டுமே தெளிவான புரிந்துணர்வுடன் சரியாகச் செயற்பட்டவர் என்று கூற முடியும். அவர் பிரதமராக வந்தவுடன் இங்கிருந்த பிரிட்டன் துருப்பினரின் தளங்கள் மூடப்பட்டன. பிரிட்டன் துருப்புக்கள் இங்கிருப்பது எமது பாதுகாப்பிற்கே என்று சொல்லப்பட்டபோது இந்தியாவும், நாமும் பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் கோருவதில் ஒருமித்து செயற்பட்டவர்கள். இந்தியாவிடமிருந்து பாதுகாப்பு அச்சுறுத்தல் வரும் என நினைத்துப் பிரிட்டன் துருப்புக்கள் தங்க இடமளிப்பது அர்த்தமற்றது என்பதுவே அவரது விவாதமாக இருந்தது. பிரிட்டன் துருப்புக்கள் வெளியேற்றப்பட்டதும், இந்தியாவிடமிருந்து ஆதரவுக்கரத்தை அவர் எதிர்பார்த்தார்.

### உடன்படிக்கை

சிறிலங்கா எப்போதும் இந்திய சோவியத்நட்புறவு உடன்படிக்கை போன்ற ஒரு உடன்படிக்கையை இந்தியாவுடன் செய்து கொள்ள வேண்டும் எனத் தெரிவித்து வந்துள்ளது. ஆனால் இவற்றுடன் தொடர்புடைய பிரச்சினைகள் வித்தியாசமானவையாக இருக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இங்கு மூன்று தரப்பினர் சம்பந்தப்பட்டுள்ளனர் என்பதோடு வித்தியாசமான முறையில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளும் உள்ளன.

ஜே. ஆர். தமது பதவிக் காலத்தின் போது அமெரிக்காவையும், ஐக்கிய இராச்சியத்தையும் உதவிக்காகநாடினார். ஆனால் பிராந்திய நாடான இந்தியாவின் உதவியையும், ஆலோசனையையும் பெற்றுக் கொள்ளும்படியே அவருக்கு அறிவுரை வழங்கப்பட்டது. எனவே 'சார்க்' நாடுகள் என்ற உணர்வை சொல்லில் மட்டுமன்றி செயலிலும் நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பிரேமதாசாவின் அண்மைய புதுடில்லி விஜயத்தின்போது இரு நாடுகளுக்கும் இடையே நெருங்கிய நட்புணர்வு தற்போது நீடிப்பதாகச் சொல்லப்பட்டது. ஆனால் இந்திய இராணுவத்தை வெளியேறும்படி ராஜீவ் காந்தி காலத்தில் தான் கோரப்பட்டது. அப்போது வரையப்பட்ட கால அட்டவணை சிறிலங்காவிற்கு திருப்தி தரவில்லை. எனினும் வி. பி. சிங் பிரதமராக வந்த பின்பும் இதே கால அட்டவணை தான் கடைப்பிடிக்கப் பட்டது.

அதன் பின்னர் அண்மையில் பிரேமதாசா சென்ற போதும் கூட இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் சர்மா அவருடன் பேசும்போது, இந்திய-சிறிலங்கா உடன்படிக்கை ஒரு நேர்மையான முயற்சி ஆனால் அது கிடப்பில் போடப்பட்டு ஒரு தசாப்தம் கடந்து விட்டது, துக்ககரமானது என்றும்; இலங்கையின் ஒருமைப் பாட்டிற்குள் தமிழ் மக்களுக்கு திருப்தி தரக்கூடிய அதிகாரப் பரவலாக்கல் பற்றியும் குறிப்பிட்டார்.

இங்கு அரசாங்கம் மாறியுள்ள போதும் அதே சொற்றொடர்கள் மீண்டும் பயன்படுத்தப்படுவதை எவரும் கவனிக்கலாம். எனவே தான் இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியாவின் பங்கு தவிர்க்க முடியாதபடி முக்கியமானதாகிறது. அதாவது மறுவளமாகச் சொன்னால் இந்தியாவின் தென்பகுயின் பாதுகாப்பை உறுதிப்படுத்த சிறிலங்காவின் உதவி, சிறிலங்காவின் அனுசரணை அதற்குத்தேவையாகஉள்ளது.

கடந்த காலத்தை திரும்பிப் பார்த்தால் இந்திய உடன்படிக்கையை எதிர்த்தவர் யார்? விடுதலைப்புலிகளும்,ஜே.வி.பியினரும், சிங்களவர்களும் தான்.

சார்க் அமைப்பின்முதன்மை பணியாக வறுமை ஒழிப்பு என்பதை உண்மையிலேயே கருதுவோமாக இருந்தால்- இந்தியாவின் உண்மையான நண்பர்கள் என்பது உண்மையாக இருந்தால்-இந்தியாவின் 850 மில்லியன் மக்களையும் சார்க் நாடுகளின் 1100 மில்லியன் மக்களையும் கவனத்திற்கு எடுத்து இவர்களின் நலன்களைப்பாதிக்கும் எந்தச் செயலிலும் ஈடுபடாதிருக்க வேண்டும்.

சுதந்திரமடைந்த காலம் முதல் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்கள் எதுவும் தமிழர்களின் இனஉணர்வைத் திருப்திப்படுத்தவில்லை. இப்போது பாராளுமன்ற தெரிவுக்குழுவின் கட்டம். இது வரையில் எந்த ஆக்கபூர்வ முடிவும் எட்டப்படவில்லை: எனவே எல்லாக்கோணங்களிலிருந்தும் பார்த்தால் இந்திய-சிறிலங்கா உடன்படிக்கை தான்இனப்பிரச்சனைத்தீர்வுக்கான அடிப்படைகளைக் கொண்டிருப்பதைக் காணலாம்

நன்றி; ஐலண்ட்

களின் இறுதித்திட்டம் எனவும் கொண்டுவிட முடியாது. சிங்கள இராணுவத்தின் நாசகார நடவடிக்கைகளுக்கு உடந்தையாகவுள்ள சிலர் புலிகளின் கட்டுப்பாட்டினுள் உள்ள பகுதிக்குள் வெடிப்பொருள்களைக் கொண்டு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ஆகையால் நாசகார சக்திகள் தொடர்ந்தும் அழிவுவேலையில் ஈடுபடவே காத்திருக்கின்றனர். இதனால், தமிழ் மக்கள் அனைவரும் இதுகுறித்து விழிப்புடனும் இருத்தல் வேண்டும்.

சிறிலங்கா இராணுவம் தனது நாசகார சதி வேலைகளுக்கு வவுனியாவிற்கு அடிக்கடி பயணங்களை மேற் கொள்பவர்களையே பயன்படுத்த முற்பட்டுள்ளது. சிறிதளவு பணம், சோதனைச்சாவடிகளில் சிறியளவு சலுகைகள் என்பவற்றின் மூலம், தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தையே நலிவடையச் செய்யும் இந் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் முனைப்பாக உள்ளது.

சிறிலங்கா இராணுவத்தின் இச் சதி வேலைக்கு உடந்தையாக இருப்பவர்கள் அடையும் அற்ப சலுகையினால் பெரிதாக எதுவித நன்மையும் அடைந்துவிடப் போவதில்லை. ஆனால் தனது இனத்தையும், மண்ணையும், வீட்டையும் காட்டிக் கொடுத்தவர்களாக ஆகின்றார்கள். சிங்கள இராணுவம் மேற்கொள்ளும் சதி நாச வேலைகளுக்கு உடந்தையாக இருப்பவர்கள் தனது இனத்திற்கு தான் துரோகம் இழைப்பதையும், தனது உற்றார், உறவினர், குடும்பத்தினரின் அழிவிற்குத் தானே காரணமாகின்றதையும் அவர் விளங்கிக் கொள்ளவேண்டும். அதாவது தான்வைக்கும் வெடிகுண்டொன்றில்தனதுதாய், சகோதரர்கள் சிக்குவதைக்கூட இவர்களால்தடுக்கமுடியாமல்போய்விடும்.

அதாவது அற்ப சலுகைகளுக்காக சிங்கள இராணுவத்தின் ஆக்கிரமிப்பிற்கும், இன அழிப்பிற்கும் உடந்தையாக இருப்பதென்பது தமது இனத்தைத் தாமே காட்டிக் கொடுப்பதாகும். தமிழரின் வரலாறு காட்டிக் கொடுப்புக்கள் நிறைந்ததாகவே இருந்து வந்துள்ளது. ஆனால் காட்டிக்கொடுத்த எவரும், தாம் எதிர்பார்த்ததை எப்பொழுதும் அடைந்ததாக இல்லை. அந்நியர்களுக்கு தனது இனத்தைக் காட்டிக் கொடுத்தவர்கள் எப்பொழுதும் அந்நியரின் அடிமைகளாகவே தமது காலத்தைக் கடத்தினர். இதில் ஐரோப்பியரென்ன, இந்தியரென்ன, சிங்களவரென்ன ஆக்கிரமிப்பாளர் சகலரும் அதையே செய்தனர். செய்வர். இதேவேளை, காட்டிக் கொடுத்தவர்கள் எப்பொழுதும் தமது மக்கள் முன்தோன்ற முடியாத துரோகிகளாகவே இருந்தனர்.

---

சிறிலங்கா இராணுவத்தினர் விடுவிக்கப்பட்டு ஜே. வி. பியினரின் கிளர்ச்சிகளை நசுக்க முடிந்தது அந்த நேரத்தில் இந்திய இராணுவத்தினர் இல்லாதிருந்தால் ஜே. வி. பியின் பொல்பொட் ஆட்சிக்கு கீழ்தான் இப்போது நாம் வாழ நேர்ந்திருக்கும். தார்மீக நியாயம் தலையெடுக்குமானால் இந்த உண்மைகளை நாடு மறந்துவிடவோ மறுத்து விடவோ முடியாது. உடன்படிக்கையின் அம்சங்களை ஏற்று விடுதலைப் புலிகள் இந்திய இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டிருப்பார்களேயானால் ஈழக்கோரிக்கையைக் கைவிட்டிருக்கநேர்ந்திருக்கும்.

விடுதலைப் புலிகளோடு போரிட்டதன்மூலம்சிலஆயிரம் இந்திய இராணுவத்தினர் உயிர் துறந்தனர் இது இலங்கையின் ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதற்காக இந்தியா கொடுத்த வாக்குறுதியைக் கடைப்பிடித்தமைக்கு ஒரு தெளிவான சான்று ஆகும். ஆனால்சிறிலங்காவின் பெரும்பாலான குடிமக்கள் இதனை ஏற்றுக்கொள்வதாக இல்லை. தமது வேலையை முடிக்கும் இறுதிக்கட்டத்தில் அவர்கள் வெளியேறுமாறு கேட்கப்பட்டனர். இதனால் இப்போது எமது படையினரும் பெரும்பாலான, குடிமக்களும் எந்த விதமான அர்த்தமுமின்றி கொல்லப்படும் சூழல் உருவாகியிருக்கின்றது.

இந்த உண்மைகள் பற்றிய எத்தகைய புரிந்துணர்வுமின்றி சிங்களவர்கள் உடன்படிக்கையை எதிர்க்கின்றனர் ஏனெனில், இந்தியாவிற்குப் பிராந்திய வல்லரசாக மாறும் எண்ணம் உண்டென்றும், அதற்கான முதல் நடவடிக்கையே இந்த உடன்படிக்கை என்றும் அவர்கள் நம்பவைக்கப்பட்டுள்ளனர். இந்த வேளையில் இந்தியாவின் கடந்த கால வரலாறு பற்றி நாம் பார்க்கவேண்டும். 3000-4000 வருடத்தைய இந்திய வரலாற்றில் ஆக்கிரமிப்பு நோக்குடன் ஒரு படையெடுப்பு நடத்தப்பட்டதாக எங்கும் காணமுடியாது. இந்தியாவில் பெரும்பாலோர் இந்துக் மத அடிப்படையிலான இந்தப் பிரிவினையை அடியொற்றியே தமிழர்களும் இங்குசெயற்படுகின்றனர்.

எனவே இந்த நிலையில் நாங்கள் பாகிஸ்தானுக்கு ஆதரவு அளித்தால் தமிழர்களின் பிரிவினைவாதத்தை ஆதரிப்பதற்கு ஒரு தார்மீக நியாயம் கிடைத்துவிடும்.

காஷ்மீரை எடுத்துக்கொண்டால் முஸ்லிம்களைப்பெரும்பான்மையாகக் கொண்ட இந்திய மாநிலம் ஒன்றுஅது. இந்தியாவிலிருந்து பிரிந்து செல்ல அல்லது பாகிஸ்தானுடன் சேர்ந்து கொள்ள அங்கு போராட்டம் நடக்கின்றது. இந்தியாவின் பிற மாநிலங்களில் நூறு கோடிக்கும் அதிகமான முஸ்லிம்கள் சுமுகமாக வாழ்கின்றனர். இங்கும் அது போலத்தான் தமிழர்களில்ஒரு சாரார் தனிநாடு அமைக்க, அல்லது தமிழ்நாட்டுடன் இணைக்க போராடி வரும் அதேவேளை ஏனையோர் பிற பகுதிகளில் சுமுகமாக வாழ்கின்றனர். காஷ்மீரில் முஸ்லிம்களின் நிலையும், சிறிலங்காவில் தமிழர் நிலையும் ஒரே மாதிரியானவைதான். இந்திய எதிர்ப்புவாதத்தின் அடிப்படையில் சிந்தனையில்லாமல் காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு ஆதரவு அளிப்பது சரியென்றால் தமிழர்களின் பிரிவினைக் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவிப்பதில் என்ன தவறு இருக்க முடியும்?

இந்தியாவின் பாதுகாப்பைப் பொறுத்து இலங்கையின் அமைவிடம் முக்கியமானது. இது பிரித்தானியா வகுத்த பாதுகாப்புத் திட்டம். பர்மாவில் வெற்றி கொண்ட பின்னர் யப்பானியர்கள் இலங்கையைத் தான் தாக்கினர். இந்தியாவின் தென்புறத்தின் ஊடாக ஊடுருவுவதே அவர்களின் திட்டமாக இருந்தது.

இந்தியாவினால் தான் இலங்கைக்குச் சுதந்திரமே கிடைத்தது. இந்தியாவைக் கைவிட்ட பின்னர் இலங்கையைத் தக்க வைத்துக்கொள்ளும் அவசியம் பிரிட்டனுக்கு இருக்கவில்லை.

இதனால் 850 மில்லியன் சனத்தொகையைக் கொண்ட

---

தது. பிரிட்டன் துருப்புகள் ஒரு நேர்மையான முயற்சி

நன்றி; ஐலன்ட்

---

# ஈராக்கிற்கு ஆயுத விநியோகம் புஷ் நிர்வாகம் மீது குற்றச்சாட்டு

(வாஷிங்டன்)

ஈராக்கிற்கு ஆயுத உதவிகள் வழங்கியதாக அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

டெக்ஸாஸ் பிரதிநிதி ஹென்றி கொன்சாலேஸ் செனட் சபையில் இது பற்றிக் குறிப்பிட்டு உரை நிகழ்த்தினார். ஈராக்கின் இராணுவத் தரத்தை பலப்படுத்தும் வகையில் புஷ் நிர்வாகம் ஈராக்கிற்கு ஆயுத உதவிகளை வழங்கியதற்கு ஆதாரமாக பல ஆவணங்களையும் இவர் சமர்ப்பித்தார்.

அவர் தமது உரையில்; ஈராக்கிற்கு நாம் குண்டுகளை விற்றோமா? இல்லை. ஆனால் அணுகுண்டுகளைத் தயாரிக்கக் கூடிய உபகரணங்களை- நீண்ட தூரம் பாயக்கூடிய ஏவுகணைகளை புஷ் நிர்வாகம் விற்பனைசெய்துள்ளது. இந்த ஆவணங்கள் மூலம் அமெரிக்கா ஈராக்கிற்கு ஏற்றுமதி செய்த இராணுவத்திற்குத் தேவையான பல உபகரணங்கள் பற்றி தெளிவாகின்றது என்று குறிப்பிட்டார்.

எனினும் இந்த ஆயுத விற்பனை அனைத்தும் ஈராக், குவைத் மீது ஊடுருவல் செய்வதற்கு முன்னர் நடந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

---

# அரசியற் குற்றத்திற்கு பொது மன்னிப்பு

(ஜோகானஸ்பேர்க்)

தென்னாபிரிக்காவில் எத்தகைய குற்றங்கள் என்று குறிப்பிடாமல் அரசியல் குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கி பாதுகாப்பு அளித்திட வகை செய்யும் சட்ட மூலத்திற்கு அதிபர் சபை அங்கீகாரம் அளித்துள்ளது.

தற்போது அதிபரின் அங்கீகாரத்திற்கு காத்திருக்கும் இச் சட்டமூலம் அதிபர்கையெழுத்திட்டதும் அமுலுக்குவரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

---

# வெளிநாட்டு இந்தியர்களுக்கு இரட்டைக் குடியுரிமை

**- வி. பி. சிங்**

வெளிநாட்டில் வாழும் இந்தியர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட வேண்டுமென்று ஜனதா தள் கட்சித் தலைவரும் முன்னாள் பிரதமருமான வி. பி சிங் கோரிக்கை விடுத்துள்ளார்.

திருவனந்தபுரத்தில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய அவர் மேலும் கூறுகையில்; நாட்டின் பொருளாதாரத்துறையில் ஏற்பட்டு வரும் கட்டமைப்பு மாற்றங்களைக்குறைகூறினார்.

---

# வெளிநாட்டிலுள்ள தமிழர் தமிழகத்தில் முதலிட ஆர்வம்;

(சென்னை)

அமெரிக்கா, பிரிட்டன், ஹாங்கொங், சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் வாழும் தமிழர்கள் தமிழ்நாட்டில் மின்னணுத் தொழில்களைத் தொடங்க ஆர்வத்துடன் இருப்பதாகத் தமிழக மாநில சட்டப்பேரவைத் தலைவர் சேடப்பட்டி முத்தையா கூறியுள்ளார்.

பகாமாஸில் நடைபெற்ற காமன்வெல்த் நாடுகளின் சபாநாயகர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு விட்டு சென்னை திரும்பிய அவர், நேற்று முன்தினம் தலைமைச் செயலகத்தில் நிருபர்களிடம் பேசும்போது மேலும் கூறுகையில்; வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் தமிழ்நாட்டில் தொழில்கள் தொடங்க ஆர்வத்துடன் இருப்பதாகக் குறிப்பிட்டார்.

---

# அரசு பத்திர ஊழல்பற்றி றிசர்வ் வங்கிஅறிந்திருந்தது

**-ஆர். எம். மிர்தா**

(டில்லி)

யூகோ பாங்க் ஈடுபட்ட சட்டவிரோத நடவடிக்கை பற்றி இந்திய றிசர்வ் வங்கி தெரிந்திருந்தது என்பதற்கான சட்டபூர்வ ஆதாரங்கள் கிடைத்திருப்பதாக அரசுப் பத்திர பேர ஊழல் பற்றி விசாரித்துவரும் கூட்டுப்பாராளுமன்றக்குழு கூறியுள்ளது. கமிட்டி நேற்று முன்தினம் நடாத்திய கூட்டத்திற்குப்பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய கமிட்டித் தலைவர் ஆர். எம். மிர்தா மேலும் கூறுகையில்; யூகோ பாங்கின் முன்னாள் தலைவர் ஆர். கே. மார்க்கபந்து கமிட்டியால் விசாரிக்கப்பட்டதாகவும் இந்திய றிசர்வ் வங்கி சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

ஈழநாதம்

# பிரச்சினையை தீர்க்க புதிய யோசனை தேவை

## - விக்கிரமபாகு கருணாரத்னா

(கொழும்பு)

புதிய யோசனையை அரசு முன் வைக்காமல் வடக்கு, கிழக்கு பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்றும், இன்று நாடு, இந்த நிலையில் இருப்பதற்கு வடக்கு, கிழக்கு பிரச்சினையேகாரணம் என்றும் நவ சமசமாஜக்கட்சியின் பொதுச் செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்னா கூறியுள்ளார்.

கொழும்பு கிராண்ட்பாஸ் சந்தியில் நடைபெற்ற கட்சியின் பொதுக்கூட்டத்தில் பேசிய அவர் மேலும் கூறுகையில்,

தமிழர்களின் கோரிக்கைகளை முழு மனதோடு தீர்த்து வைக்க அரசு முன்வரவேண்டும். இன்றேல் இப்பிரச்சினையை தீர்த்து வைக்கவே முடியாது. மலையக தமிழர்களுக்கு பிரஜா உரிமையை கொடுக்கமுடியாத சிறிமா பண்டாரநாயக்காவினால் தமிழர் கோரிக்கைகளை எப்படித் தீர்க்க முடியும்? உலக வங்கியின் யோசனைகளைக் கேட்டுக் கேட்டு ஜனாதிபதி நம்நாட்டு மக்களை சொந்த நாட்டிலேயே அகதிகளாக்கிக் கொண்டிருக்கிறார் என்றும் தெரிவித்தார்.

## சங்கீத ஆசிரியர்களுக்கு பட்டதாரிச் சம்பளம் இல்லை

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாண சபையினால் நியமனம் வழங்கப்பட்ட சங்கீத ஆசிரியர்களுக்கு இதுவரை பட்டதாரிச் சம்பளம் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

1990 இல் நியமிக்கப்பட்ட இவ் ஆசிரியர்களுக்கு மூன்று வருடங்கள் ஆகியும் பட்டதாரிச் சம்பளம் வழங்கப்படவில்லை.

பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கோட்ட அலுவலகங்களுக்குச் சென்று இது பற்றிக் கேட்டபோது வடக்கு-கிழக்கு மாகாணசபையில் இருந்து இதற்கான அனுமதி வழங்கப்படவில்லை என சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பதிலளிக்கின்றனராம்.

## வடபகுதி இளைஞர் பொலிசாரிடம் சரண்

(நிட்டம்புவ)

தேடப்பட்டு வந்த பப்பட தொழிற்சாலைஊழியர் ஒருவர் புதன்கிழமை நிட்டம்புவ பொலிசாரிடம் சரண் அடைந்துள்ளார். இவர் வடபகுதியைச் சேர்ந்தவர் என்றும் இவரின் பெயர் நடராஜா விக்கினேஸ்வரன் என்றும் தெரியவந்துள்ளது.

இவரிடப் விசாரணைதொடர்ந்து நடைபெறுவதாக நிட்டம்புவ பொலிஸ்வட்டாரங் தெரிவிக்கின்றன.

## சுவிஸ் பிரஜை குற்றத்தை ஏற்றார்

(கொழும்பு)

சட்ட விரோதமாக ஆயுதங்களை வைத்திருந்ததாககருதப்பட்டு பொலிசாரால் கைது செய்யப்பட்ட சுவிஸ் பிரஜை ஒருவர் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளார்

எக்கல அலெக் சான்டிரா பிளேசில் இருக்கும் தமது இல்லத்தில் சட்ட விரோதமாக ஆயுதங்களை மறைந்து வைத்திருந்தமை தொடர்பாக சுவிஸ் பிரஜையான அலன் கெயர் கிறிஸ்டியன், பொலிசாரால் சிலகாலத்திற்கு முன் கைது செய்ப்பட்டது தெரிந்ததே.

நேற்று முன் தினம் நீர்கொழும்பு நீதிவான் மடவல முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது தமது குற்றத்தை ஏற்றுக் கொண்டார்.

## சக்கோட்டை கிராமத்தில் ஆயுர்வேத வைத்தியசாலை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச சபை சக்கோட்டைக் கிராமத்தில் இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலைக் கிளை ஒன்றைத் திறந்து வைத்துள்ளது.

இவ் ஆயுர்வேத வைத்திய சாலைக் கிளைத்திறப்பு விழா சக்கோட்டை அர்ச். சவேரியார் சனசமூக நிலையத் தலைவர் திரு டேவிட் தலைமையில் நடைபெற்றது. பருத்தித்துறை உதவிப் பங்குத்தந்தை அருட். திரு. சிங்கராயர் அடிகளார் மங்கள விளக்கையும் தமிழீழ கடற்புலிகள் உறுப்பினர் திரு. விஜயன் தமிழீழ தேசியக் கொடியையும் ஏற்றி

## 45-ம் நாள் நினைவஞ்சலி

## பரிசளிப்பு விழா

(வடமராட்சி)

பருத்தித்துறை ஐயனார் கலட்டி வசந்தன் சிறுவர் பாடசாலை பரிசளிப்பு விழா வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு சமூக சேவை உத்தியோகஸ்தர் திரு ரி. கிருபாகரன் தலைமையில் நடைபெற்றது.

அதி சிறந்த மாணவர்களுக்கான விருது செல்வி சி. மேகலாவிற்கு வழங்கப்பட்டது. மற்றும் பரிசளிப்பு விழாவின்போது நாடகம் கலை நிகழ்ச்சிகள் விளையாட்டுப் போட்டிகளும் இடம்பெற்றன. (82)

## அகதிமுகாமில் பாலர் பாடசாலை

(வடமராட்சி)

வடமராட்சி போரூட் நிறுவனத்தினால் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பராமரிக்கப்பட்டு வரும் பத்து அகதிகள் முகாம்களில்மூன்று முகாமிற்கு சிறுவர்களின் நலன் கருதி ஒரு பாலர் பாடசாலை நிறுவப்பட்டுள்ளது.

மற்றும் இடம்பெயர்ந்த மாணவர்களுக்கென ஆழிய வளை பாடசாலைக்கு தளபாடங்களும் வழங்கப்பட்டன.

மேலும் வடமராட்சி கிழக்கில் இருந்து இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து விதவைகளான 25 குடும்பங்களுக்கு சுய தொழிலை மேற்கொள்ள தலா இரண்டாயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டது. (82)

## திருக்குறள் வகுப்புகள்

(உரும்பராய்)

திருக்குறளைப் பரப்பும் நோக்குடனும் தமிழ் மக்கள் அனைவரும் அதனை அறிந்து கொள்வதற்கும் வசதியாக திருக்குறள் இலவச வகுப்புகளை நடாத்துவதற்கு உரும்பராய் திருவள்ளுவர் மன்றம் தீர்மானித்துள்ளது.

திருக்குறள் தொடக்க வகுப்புகள் எதிர்வரும் புதன் கிழமை மாலை 4 மணிக்கு உரும்பராய் இந்துக் கல்லூரியில் எளிமையான முறையில் ஆரம்பமாகும்.

இவ் இலவச வகுப்புகள் மாதாந்த முழுநிலா நாட்களில் தொடர்ந்து இடம் பெறும். இவ்வகுப்புகளில் ஆர்வலர்கள், நலன் விரும்பிகள் க.பொ.த. உயர்தர வகுப்பில் தமிழ்ப் பாடத்தை கற்கின்ற மாணவர்கள் அனைவரையும் பங்கு பற்றி சிறப்பிக்குமாறு மன்றம அன்புடன் அழைக்கின்றது [03]

# பத்திரிகையாளர் போர்க்கொடி நுவரெலியாவில் ஊர்வலம்

(நுவரெலியா)

நுவரெலியாவில் யுத்திய, ராவய, பத்திரிகைகளின் செய்தியாளரும், விற்பனையாளரும் நுவரெலியா மாநகர முதல்வரால் மிரட்டப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று ஊர்வலம் நடைபெற உள்ளது.

இப்பத்திரிகைச் செய்தியாளரும் விற்பனையாளரும் கடந்த 14 ஆம் திகதிநுவரெலியா மாநகர முதல்வரால் மிரட்டப்பட்டிருந்தனர் என தெரிவிக்கப்படுகிறது.

பத்திரிகை விற்பனையாளருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக சுவரொட்டிகளும் நுவரெலிய நகரப் பகுதியில் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

# 26 இலங்கைத் தமிழ் மீனவர் தமிழ் நாடு காவல் படையால் கைது

(சென்னை)

தூத்துக்குடியை தளமாகக் கொண்டு செயற்படும் கடலோர காவற் படையினர் கடந்த வியாழனன்று இலங்கைத் தமிழ் மீனவர்கள் இருபத்தாறு பேரைக் கைதுசெய்துள்ளனர். ஐந்து படகுகளில் சென்ற இவர்கள் கன்னியாகுமரிக்கு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்ததாகவும், கடலோரக் காவற் படையின் சமிக்ஞைகளைப் புறக்கணித்ததால் இப் படகுகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்ட பின்னர் இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் கடலோர காவற்படையினர் கூறியுள்ளனர். மேலும் இப்படகுகளில் இருந்த மீனவர்களிடம் தகுந்த ஆவணங்கள் எதுவும் இருக்கவில்லை யெனவும் கூறப்படுகிறது தற்போது கன்னியாகுமரியில் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் இவர்களிடமிருந்து நாலாயிரம் லீற்றர் டீசலும், நாலரைத்தொன் மீன்களும் கைப்பற்றப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மீன்பிடி வலைகளை வழங்க செஞ்சிலுவை முன்வந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் கரையோர மீன்பிடியை ஊக்குவிக்க 35 இலட்ச ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகளை வழங்க இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை முன்வந்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளால்மீடிபிடி தொழில்பெரிதும்பாதிப்புகுள்ளாகியுள்ளது. இச் சந்தர்ப்பத்தில் கரையோர மீன்பிடியை ஊக்குவிக்குமுகமாக யாழ். மாவட்ட மீனவர்களுக்கே இம் மீன்பிடி வலைகள் வழங்கப்படவுள்ளன

இவ் வலைகள் இவ்வார இறுதிக்குள் இங்குவந்துசேரும் என எதிர்பார்க்கப்படுகிறது

## பொலிசாரால் கைதானவர் விபரம் தெரியவில்லை

(கொழும்பு)

கொழும்பு தெஹிவளையில் தங்கியிருந்த புலோலியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் சீருடையணிந்தவர்களால் கைது செய்யப்பட்டு இருவாரங்களாகியும் அவர் பற்றிய விபரங்களை அறிய முடியவில்லை.

இவர் கடந்த 14 ஆம் திகதி சீருடை அணிந்தவர்களால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவர் குறித்து தெஹிவளை பொலிஸ் நிலையத்தில் விசாரித்தபோது தாம் கைதுசெய்யவில்லை என தெரிவிக்கப்பட்டது.

யாழ்.

சிகிச்சைஅளிக்கப்படுவதாகவும் இந்த நோயாளர் முதல் இரண்டு அல்லது மூன்று மாதத்தில் மருத்துவ மனையில் தரித்துச் சிகிச்சை பெறுவது சிறந்தது என்றாலும் அதற்கு தற்போது வசதிகள்இல்லாமையினால் அப்படி செய்ய முடியாமல் உள்ளது என்றும், தற்போது மிகக் கடுமையாக இந்த நோயினால் பீடிக்கப்பட்ட ஆண்கள் சங்கானை

யாழ். அகதி

இனமும் வெகுவாகப் பரவலடைந்துள்ளதாகவும் இது தொடர்பாக முகாம்களில் வசிக்கும் மக்களை முன்னெச்சரிக்கையாக இருக்கும்படி அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இந் நோய்க் காரணிகளைப் பெருக்கும் நுளம்புகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்திற்கும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கும் அளிக்கப்பட்டுள்ளதாகவும் யாழ். இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கவட்டாரங்கள்

அரச

துள்ளனர். இறுதியாக நேற்று மணலாற்றுப் பகுதிக்கும் விஜயம் செய்துள்ளனர்.

இவ் விஜயங்களின்போது சாதாரண சிப்பாய்கள்மட்டத்திலும் அதிகாரிகள் மட்டத்திலும் உள்ளோருக்கு உற்சாகமூட்டக்கூடிய விதத்தில் நடந்து கொண்டதோடு, இராணுவத்தினரின் குறைகளைத் தீர்ப்பதாகவும் வாக்குறுதியளித்தனர்.

இதேவேளை இராணுவத்தினருக்கு வழங்கப்படும் சீருடைகள், சிகரட் போன்றவை துரிதகெதியில் விநியோகிக்கப்படும் என்றும், படையினரின் உறவினர்களுக்குத் தேவையான சுகாதாரவசதிகள் அவர்கள் வசிக்கும் பகுதியில்சலுகை அடிப்படையில் செய்துகொடுக்கப்படும் எனவும் இராணுவ உயர் பீடம் உறுதியளித்தும் உள்ளது.

கல்முனை

கட்டுமரத்தில் படுத்திருந்த நிலையில் இராணுவத்தினர் நெருங்கியதை மீன்பிடி வள்ளத்தில் நின்ற தமையன் கவனிக்கவில்லை என்று தம்பியார் கூறினார்.

இராணுவத்தினர் தன்னைப் பிடிக்க முயன்றதாகவும் சுழி ஓடித் தெரிந்ததால் தப்பிவர முடிந்ததெனவும் அவர் கூறினார்.

# 45-ம் நாள் நினைவஞ்சலி



## 2-ம் லெப். தேவானந்தி

(சுப்பிரமணியம் தேவராணி)

(கீரிமலை)

அன்னை மடியில்
27-10-1971

மண்ணின் விடுதலைக்காய்
15-09 1992

காற்றின் அலைகளாய்
நெருப்பின் பொறிகளாய்
மண்ணை நேசித்து
மரணத்தை யாசித்து
வீறுகொண்ட வேங்கையாக
களத்தில் உயர்ந்திட்டாய்
மாவீரர் வரிசையில்!

''அன்று இவருடன் வீரச்சாவடைந்தவர்களுக்கும் வீர அஞ்சலி செலுத்துகின்றோம்''

இன்று 01-11-1992 (ஞாயிறு) இவரது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், சகபோராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உன் பிரிவால் வாடும்

அம்மா, தம்பி, சகோதரர்,
உற்றார், உறவினர், நண்பர்கள்

கே. கே. எஸ். றோட்,
தீசன் வீதி,
கல்லாரை, மல்லாகம்.

(ஓ-5337)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 01ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

தமிழீழ கடற்புலிகள் உறுப்பினர் திரு. விஜயன் தமிழீழ தேசியக் கொடியையும் ஏற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர். பருத்தித்துறை பிரதேச சபை விசேட ஆணையாளரும், பிரதேசச் செயலாளருமான திரு.சி.முருகேசபிள்ளை நாடாவை வெட்டி, வைத்தியசாலைக்கிளையைத் திறந்து வைத்துள்ளார் ஆயுர்வேதவைத்திய அதிகாரி திருமதி யோ. இந்திராணி மரியநாயகம் நோயாளருக்கு வைத்திய சிகிச்சைகளை வழங்கி வைத்திய சேவைகளை ஆரம்பித்துவைத்தார். பருத்தித்துறை பிரதேசசபைச் செயலாளர் திரு ச. செவ்வந்திநாதர் அதிபர் திரு. ச. மயில்வாகனம் ஆயுர்வேத வைத்திய அதிகாரி எஸ். கனகலிங்கம் ஆகியோரும் உரையாற்றினர். (25)

## புகைப்பிடித்தலுக்கு 3 கோடி ரூபா செலவு

[கொழும்பு]

இலங்கை மக்கள் நாளொன்றிற்கு மூன்று கோடி ரூபாவை புகைப்பிடித்தலுக்காகச் செலவிட்டு வருவதாக ஆய்வு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது. புற்றுநோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்ட நிறுவனம் மேற்கொண்ட ஆய்விலிருந்து இது தெரிய வந்திருக்கிறது.

புகைப்பிடித்தல் மற்றும் போதைப் பொருள்களுக்காக செலவிடும் பணத்தை சேமித்தால் அது பெரும் பயனுடையதாக இருக்கும் என்றும் பொது மக்களின் மனோபாவத்தில் மாற்றம் ஏற்படுத்துவதன் மூலம் மட்டுமே இது சாதிக்கப்பட முடியும் என்றும் கூறப்படுகிறது.

## மீனவர் படகுமீது துப்பாக்கிச் சூடு

(யாழ்ப்பாணம்)

பேசாலை குரூஸ்பாடு கடற்பகுதியில்கடந்தசெவ்வாயன்று பயணம் செய்த மீனவர் படகொன்றின் மீது புளொட் குழு உறுப்பினர்கள் மேற்கொண்ட தாக்குதலில் மூன்று பயணிகள் கொல்லப்பட்டனர் என தெரியவருகின்றது

வரையும் பங்கு பற்றி சிறப்பிக்குமாறு மன்றம அன்புடன் அழைக்கின்றது [03]

## மண்டபங்கள் திறப்பு

வடமராட்சி கிழக்கில் தற்காலிக பாடசாலை மண்டபங்கள் கடந்த 21 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டன. இப்பாடசாலை மண்டபங்களுக்கு மாவீரர்களின் பெயர்களும் சூட்டப்பட்டன.

இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக விசேட தளபதி கடற்புலிகள் தமிழீழம் சூசை. சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி கிழக்கு அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் (கடற்புலிகள்) பாண்டியன், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் திரு. கே. கேதீஸ்வரன் நாகர் கோயில் பிரதிக் கொத்தணி அதிபர் திரு. பா. இரகுநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (82)

## ஆயுர்வேத பாதுகாப்புச் சபை

வடமராட்சியில் ''ஆயுர்வேத பாதுகாப்புச் சபை'' ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் ஆயுர்வேத மூலிகைகளைப் பாதுகாத்தல், மூலிகைகளை வளர்த்தல், ஆயுர்வேத வைத்தியர்களின் நலன்களைப் பேணல் ஆகிய பணிகளை இச்சபை துரிதகெதியில் மேற்கொள்ளும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (24)

## ''குமாரி'' இன்று வரும்

''குமாரி'' கப்பல் திருக்கோணமலையில் இருந்து புறப்பட்டு பருத்தித்துறையை இன்றுவந்து சேரும்என தெரியவருகின்றது.

இக்கப்பல் யாழ். குடாநாட்டிற்குத் தேவையான சுமார் 3200 மெற்றிக்தொன் மாவை ஏற்றிவருகின்றது என யாழ். செயலகம் அறிவித்துள்ளது.

யாமல் உள்ளது என்றும், தற்போது மிகக் கடுமையாக இந்த நோயினால் பீடிக்கப்பட்ட ஆண்கள் சங்கானை ஆஸ்பத்திரியிலும், பெண்கள் சாவகச்சேரி ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்க ஏற்பாடாகி உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நோய் மிக விரைவாக தொற்றக் கூடியது என்பதால் இவர்கள் இப்படியான பொது மருத்துவ மனையில் சிகிச்சை பெறுவது அவ்வளவாக உசிதமானதன்று. எனவே புறநகர் ஒதுக்குப்புறத்தில் இதற்காக ஒரு ஆஸ்பத்திரி அமைதல் வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இந்தவருடத்தின் முதல்ஆறு மாதத்தில் சுமார் 8 பேர் மரணம் அடைந்ததாகவும், இவர்கள் ஒழுங்கான முறையில் மருந்துபாவனை செய்யாமையினால் இது ஏற்பட்டதாகவும் தெரிவித்தார்.

இந்நோயை கண்டுபிடிக்க எக்ஸ் கதிர்படம் எடுக்க வசதி இல்லை. மந்திகை ஆஸ்பத்திரியில் மாதம் இருமுறை நோயாளர்களைக்கொண்டுசென்று எக்ஸ் கதிர்ப் படம் எடுக்கபடுவதாகவும் இதனால்நோயாளருக்கு பல அசௌகரியங்கள் ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் நோயாளருக்கு அரசினால் வழங்கப்படும் உதவிப் பணம் ஆஸ்பத்திரி நிருவாகம் உடனடியாக சிபார்சு செய்தாலும் சமூக திணைக்களம் உதவி அரச அதிபர் பிரிவுகளினூடாக விசாரணை செய்து கொழும்புக்கு விபரம் அனுப்பி வருவதற்கு இரண்டு மாதங்களுக்கு மேல் தேவைப்படுகின்றது. ஆகவே இந்த நோயாளர் இதன் மூலம் பெறும் ஓரளவு சத்துணவுகூட கிடைக்காது கஷ்டப்படுகின்றார்கள்.

ஆனால் ஆஸ்பத்திரி இருப்பின் இவர்களுக்கு தேவையான சத்துள்ள உணவு உடனடியாக வழங்கப்படும். இதனால் நோயின் தாக்கம் குறைவடையும் எனவே ஆஸ்பத்திரி ஒன்று இன்றியமையாதது என்பதை ஆஸ்பத்திரி வட்டாரங்கள் வலியுறுத்தின.

கும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கும் அளிக்கப்பட்டுள்ளதாகவும் யாழ். இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கவட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (பா)

## முன்னாள்

திணைக்களத் தரவுப் பகுதியில் பொறுப்பதிகாரியாகவும், பிரதிப் பரீட்சை ஆணையாளராகவும் கடமையாற்றியவர் பரீட்சைத் திணைக்களத்தின் மிக முக்கிய பிரிவான தரவுப் பகுதி க. பொ. த. (சா த), க. பொ. த. (உயர்தரம்) பரீட்சை விண்ணப்பம்மற்றும்பரீட்சைப் புள்ளிகள் சம்பந்தப்பட்ட பணிகளைச் செய்வது குறிப்பிடத் தக்கது.

நாணயக்கார ஒக்டோபர் 16, 1979 இல் பல ஊழல் குற்றச் சாட்டுகள் குறித்துக் கட்டாய ஓய்வில் அனுப்பப் பட்டார்.

பொது நன்மை கருதி இவருக்கு கடுமையான தீர்வு வழங்கவேண்டும் என்று கூறிய நீதியரசர் சில்வா முன்னர் வழங்கப்பட்ட தீர்ப்பை அனுமதித்தார்.

இராணுவத்தினர் தன்னைப் பிடிக்க முயன்றதாகவும் சுழி ஓடித் தெரிந்ததால் தப்பிவர முடிந்ததெனவும் அவர் கூறினார்.

இது சம்பந்தமான முறைப்பாடொன்றை உறவினர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தில் செய்துள்ளனர். (21)

## பலாலி

ஓர் எறிகணையால் தாயும், மகளும் காயமடைந்ததாகவும் இவர்கள் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை நேற்று இரவு 10.30 மணியளவில் பரவலாக எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இவை வீழ்ந்து வெடித்த அதிர்வுகள் பலமைல் தூரங்களுக்குக் கேட்டன. இத் தாக்குதல்களினால் ஏற்பட்ட சேத விபரங்கள் உடனடியாகத் தெரியவில்லை.

(ச)

## உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள்

### 31. 10. 1992

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 6397

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:-

24-6480, 24-6432, 40-6979, 22-6579, 26-7039, 42-1320, 28-3528, 42-9326, 24-2024, 41-9167, 28-2385, 22-1647, 25 8794, 26-9728, 25-312, 26-6568, 24-4467, 24-8558, 41-5599. 41-8629, 28-2049, 24-9938, 40-9188, 24-7356, 26-1169, 28-427 26-3741, 36-4438

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்

40-2829, 26-4430. 26-6858, 24-5241, 24-4908, 26-2510, 24-4664, 28-9037, 41-8626, 42-9220, 41-494, 27-7740, 27-4289, 26-7546 27-994, 24-5794, 41-1092,, 26-5882. 28-2657 27-8149 41-4719, 24-5774, 27-9489 24-7078